DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.29/2024**
**P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.செல்வி |
| Husband's Name | : | திரு.சுப்பிரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 50 |

(Accused 1 to 3 are present. Accused 4 absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் மணப்பாறை தாலுகா,பொத்தப்பட்டி, சாமியார் தோப்பில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் இந்து பள்ளர் சாதியை சேர்ந்தவர் ஆவேன். எனக்கு திருமணமாகி 2 மகன்கள் இருக்கிறார்கள். எதிரிகளை தெரியும். எதிரிகள் நாயுடு சாதியை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எங்களுக்கு பூர்வீகமாக உள்ள சொத்து சாமியார் தோப்பில் உள்ளது. எங்கள் வீட்டின் அருகில் உள்ள நிலம் சம்பந்தமாக எதிரிகளுக்கும், எங்களுக்கும் இடையில் முன் விரோதம் இருந்தது. அதனால் சர்வேயரை வைத்து நிலத்தை அளந்தோம். சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் அவ்வாறு அளந்த போது மணி 3.00 மணி இருக்கும். அப்போது நாகராஜ் மண்வெட்டியை எடுத்து எனது சின்ன மகன் பாஸ்கரை அடித்ததில் இடது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. ஜெயராமன், பாப்பத்தி, சின்னமணி, மிளகாய் பொடியை எடுத்து தூவினார்கள். எங்களை பார்த்து பள்ள புண்ட மவனே என்று பேசினார்கள். நாங்கள் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். சிகிச்சை எடுத்து விட்டுவந்து மறுநாள் வையம்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அந்த புகார் மனு அரசு தரப்பு சான்றாவணம் 1 ஆகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

என் வீட்டிற்கு பக்கத்தில் எத்தனை வீடுகள் இருக்கிறது என்றால் சுமார் பத்து வீடுகள் இருக்கிறது. நாங்கள் தான் சர்வேயருக்கு பணம் கட்டி அளந்தோம். அன்றைய தினம் நில அளவை நடைபெற்ற போது போலீசாரும் இருந்தார்கள். சர்வேயர் மற்றும் அவருடன் யார் யாரெல்லாம் வந்தார்கள் என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. ஒரே ஒரு போலீசார் வந்திருந்தார். அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு நில அளவை பணி ஆரம்பித்து மதியம் 3.00 மணி வரை நடந்தது. அன்று மாலை சுமார் 5.00 மணிக்கு சம்பவம் நடந்தது. எங்களை அடித்த உடன் காவல் நிலையம் சென்றோமா என்றால் மருத்துவமனைக்கு தான் சென்றோம். எங்கள் வீட்டில் இருந்து மணப்பாறை மருத்துவமனை எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. மணப்பாறைக்கு அன்று எவ்வாறு சென்றோம் என்றால் பஸ்ஸில் தான் சென்றோம். எங்கள் ஊரில் இருந்து மணப்பாறை மருத்துவமனையை விட வையம்பட்டி காவல் நிலையம் பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையில் வையம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.392/2022 ஒரு கொலை முயற்சி வழக்கு எங்கள் மீது நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அது இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. எனக்கு எந்த இடத்தில் அடிபட்டது என்றால் மிளகாய் பொடியை பாப்பாத்தி என்பவர் என் மீது தூவிவிட்டார். அதனால் எனக்கு என்ன ஏற்பட்டது என்றால் மயக்கம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டேன். சம்பவம் நடந்த உடன் மருத்துவமனைக்குச் சென்றபோது அங்கு எந்த மருத்துவர் என்னிடம் என்ன நடந்தது என்று கேட்டு விசாரித்தார். என்னை பரிசோதித்த மருத்துவரிடம் மிளகாய் பொடி தூவிய காரணத்தினால் மயக்கம் ஏற்பட்டது என்று தெரிவித்தேன். எனது கணவரையும் மருத்துவர் பரிசோதனை செய்தார். என் கணவரும் அவ்வாறே சொன்னார். மாணிக்கம் அம்மாள் என்பது என் கணவரின் சகோதரர் மனைவி ஆவார். பழனியம்மாளும் என் கணவரின் சகோதரி ஆவார் . சுப்பிரமணியன் என் கணவர் ஆவார். சாவித்திரி என்பவர் என் கணவரின் சகோதரர் மனைவியாவார். அவர்கள் அனைவரும் சேர்ந்து அவர்களின் சொத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.287/2015 என மணப்பாறை நீதிமன்றத்தில் நடந்து வந்த அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின்படி இல்லாமல் தனிப்பட்ட முறையில் சர்வேயர் வைத்து அளந்தோம் என்றால் சரிதான். சர்வேயர் அளந்து காட்டிய இடத்தில் நாங்கள் கல்

ஊன்றினோம். சர்வேயர் முடிவாக அளந்து காட்டவில்லை என்றும் பழைய கோட்டை கிராம ஆவணங்களை வைத்து தான் நில அளவை செய்ய முடியும் என்று தெரிவித்து விட்டு சென்று விட்டார் என்றால் சரியல்ல. நில அளவையர் அளந்து அத்து காண்பிப்பதற்கு முன்பாகவே நாங்கள் குழி தோண்டி கல் நடுவதற்கு சென்றோம் என்றும் என்றோம்அதை தடுக்க முற்பட்ட எதிரிகளை நாங்கள் தான் தாக்கி கொலை முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கு தான் தற்போது வரை நடைபெற்று வருகிறது என்றால் சரியல்ல. அந்தக் கொலை முயற்சி வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்து இருக்கிறேன் என்றால் சரி அல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Adpeow

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.29/2024**
P.W.2

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பாஸ்கர் |
| Father's Name | : | திரு.சுப்பிரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 27 |

(Accused 1 to 3 are present. Accused 4 absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் மணப்பாறை தாலுகா, பொத்தப்பட்டி, சாமியார் தோப்பில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 செல்வி என் அம்மா ஆவார். நான் இந்து பள்ளர் சாதியை சேர்ந்தவன் ஆவேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் இந்து கவுரா நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். எங்களின் பூர்வீகம் சொத்து சர்வே எண்.172 உள்ளது. அந்த இடத்தில் எங்களுக்கும் ,எதிரிகளுக்கும் இடையில் பிரச்சனை நீண்ட காலமாக உள்ளது. கடந்த 30.11.2022 ம் தேதியன்று சர்வயேரை வைத்து மேற்படி நிலத்தை அளக்கும் போது சர்வேயர் வந்து அளந்து எங்கள் இடத்தை காட்டி விட்டு சென்றுவிட்டார். அந்த இடத்தில் கல் ஊன்றி கொள்ளுமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன்படி நாங்கள் கல் ஊன்றும் போது மதியம் 3.00 மணி இருக்கும். நான் ஊன்ற ஆரம்பித்த போது எதிரிகள் நாகராஜ், ஜெயராஜ் ஆகியோர்கள் அடிக்க வந்தார்கள். நாங்கள் தடுத்த போது எதிரிகள் நாகராஜன், ஜெயராமன் பள்ள தேவிடியா மவனே எங்கள் இடத்திற்கு எப்படி வரலாம் என்று சொல்லி திட்டினார்கள். எதிரி நாகராஜ் என்னை வலது கன்னத்தில் அடித்தார். ஜெயராமன் மண்வெட்டி பிடியால் இடது கையில் அடித்துவிட்டான். போக்கு வண்டி மூலமாக மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். என் அம்மா புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் சமூகப் பணிக்கான முதுகலை பட்டப்படிப்பு படித்திருக்கிறேன். தற்போது வங்கியில் வேலை பார்க்கிறேன். சம்பவ காலத்தில் நான் சாந்திவனம்

என்ற தொண்டு நிறுவனத்தில் பணியாற்றினேன். சம்பவம் தொடர்பாக என் அம்மாவும் நாங்களும் சேர்ந்து சென்று புகார் கொடுத்தோம். அப்போது என்னால் புகார் எழுத முடியாத நிலையில் இருந்ததால் தெரிந்த ஒரு நபர் புகார் எழுதிக் கொடுத்தார். அவர் பெயர் தெரியாது. அந்த புகாரில் நில அளவையும் நடந்து பார்த்துவிட்டு இரண்டு மீட்டர் வித்தியாசம் இருக்கிறது என்றும் பழைய கோட்டை கிராமத்தில் உள்ள நில அளவை ஆவணங்களை பார்வையிட்டு தான் முடிவாக நில அளவை செய்ய முடியும் என்று தெரிவித்தார் என்று சொல்லி இருக்கிறோம் என்றால் இல்லை. சம்பவம் நடக்கும் போது சர்வேயர் அங்குதான் இருந்தார். சர்வேயர் அளந்து அத்து காண்பிக்கும் வரை போலீசார் அங்கு இருந்தார்கள். சர்வேயர் அளந்து இறுதி முடிவு சொல்ல வேறு ஆவணம் தேவைப்படுகிறது என்று சொன்ன பிறகு நாங்கள் தான் அத்துமீறி கல் ஊன்றுவதற்காக குழி தோண்டினோம் என்றால் சரியல்ல. அதை தடுக்க வந்த எதிரிகளை நாங்கள் நால்வரும் சேர்ந்து அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையிலான குற்ற எண்.392/2022 என்ற வழக்கில் நானும் ஒரு எதிரி என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போது இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நான் என் அம்மாவை வைத்து பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரி அல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் தான் எதிரிகளை அடித்து காயப்படுத்திவிட்டு பொய் புகார் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த உடன் காவல் நிலையத்திற்கு செல்லாமல் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு தான் சென்றோம் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.29/2024**
**P.W.3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சுப்பிரமணி |
| Father's Name | : | திரு.குழந்தைவேல் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 55 |

(Accused 1 to 3 are present. Accused 4 is absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் மணப்பாறை தாலுகா,பொத்தப்பட்டி, சாமியார் தோப்பில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வி என் மனைவி ஆவார். அ.சா.2 பாஸ்கர் என் மகன் ஆவார். நான் இந்து பள்ளர் சாதியை சேர்ந்தவர் ஆவேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் நாயுடு சாதியை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எங்களுக்கு பூர்வீகமாக உள்ள சொத்து சாமியார் தோப்பில் சர்வே எண்.172 ல் உள்ளது. எங்கள் வீட்டின் அருகில் உள்ள நிலம் சம்பந்தமாக எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையில் முன் விரோதம் இருந்தது. அதனால் சர்வேயரை வைத்து ரூபாய் இரண்டாயிரம் செலவு செய்து நிலத்தை அளந்தோம். அப்போது ஊர்காரர்கள் எல்லோரும் இருந்தார்கள். அவ்வாறு அளந்த போது கடந்த 30.11.2022 ம் தேதி மணி 3.00 மணி இருக்கும். அப்போது நாகராஜ் மண்வெட்டியை எடுத்து எனது சின்ன மகன் பாஸ்கரை அடித்ததில் இடது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. ஜெயராமன், பாப்பத்தி, சின்னமணி, மிளகாய் பொடியை எடுத்து தூவினார்கள். எங்களை பார்த்து பள்ள புண்ட மவனே என்று பேசினார்கள். நாங்கள் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். சிகிச்சை எடுத்து விட்டுவந்து மறுநாள் வையம்பட்டி காவல் நிலையம் சென்று என் மனைவி புகார் கொடுத்தார். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

ஏற்கனவே நில அளவை செய்த விபரத்தை போலீசார் என்னை விசாரித்த போது தெரிவித்தேன். நில அளவையர் வந்து அளவை செய்யும் போது பழைய கோட்டை கிராம ஆவணங்களை பார்வையிட்டு தான் முடிவாக நில அளவை செய்ய முடியும் என்று தெரிவித்தார் என்றால் இல்லை. பழைய கோட்டை ஆவணங்களை வைத்து தான் இருதரப்பினர் இடத்தையும் அளக்க முடியும் என்று நில அளவையர் தெரிவித்து விட்டுச் சென்ற பிறகுநாங்கள்தான் அந்த இடத்தில் குழி தோண்டினோம் என்றால் சரியல்ல. நாங்கள் குழி தோண்டி கல் ஊன்ற முற்பட்டபோது எதிரிகள்தடுத்தபோது நாங்கள்தான் அவர்களை தாக்கி காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எங்கள் மீது இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஒரு கொலை முயற்சி வழக்கு நடைபெறுகிறது என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை.மணப்பாறை உரிமையியல் நீதிமன்றத்தில் மாணிக்கம் அம்மாளுடன் சேர்ந்து ஒரு தரப்பினராக இருந்து எதிரிகள் மீது ஒரு வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்த காரணத்தினால் என் மனைவியை வைத்து பொய் புகார் கொடுத்து போடப்பட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Adopt

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 29/2024**
**P.W.4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சந்திரசேகரன் |
| Father's Name | : | திரு.சுப்பிரமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 31 |

(Accused 1 to 3 are present. Accused 4 absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**முதல் விசாரணை**

நான் மணப்பாறை தாலுகா, பொத்தப்பட்டி, சாமியார் தோப்பில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 செல்வி என் அம்மா ஆவார். அ.சா.2 பாஸ்கர் என் தம்பி ஆவார். அ.சா.3 சுப்பிரமணி என் அப்பா ஆவார். நான் இந்து பள்ளர் சாதியை சேர்ந்தவன் ஆவேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் இந்து கவுரா நாயுடு வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். எங்களின் பூர்வீகம் சொத்து சர்வே எண்.172 உள்ளது. அந்த இடத்தில் எங்களுக்கும் ,எதிரிகளுக்கும் இடையில் பிரச்சனை நீண்ட காலமாக உள்ளது. கடந்த 30.11.2022 ம் தேதியன்று சர்வயேரை வைத்து மேற்படி நிலத்தை அளக்கும் போது சர்வேயர் வந்து அளந்து எங்கள் இடத்தை காட்டி விட்டு சென்றுவிட்டார். அந்த இடத்தில் கல் ஊன்றி கொள்ளுமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன்படி நாங்கள் கல் ஊன்றும் போது மதியம் 3.00 மணி இருக்கும். நான் ஊன்ற ஆரம்பித்த போது எதிரிகள் நாகராஜ், ஜெயராமன், பாப்பத்தி, சின்னமணி ஆகியோர்கள் அடிக்க வந்தார்கள். நாங்கள் தடுத்த போது எதிரிகள் நாகராஜன், ஜெயராமன் பள்ள தேவிடியா மவனே எங்கள் இடத்திற்கு எப்படி வரலாம் என்று சொல்லி திட்டினார்கள். எதிரி நாகராஜ் என்னை வலது கன்னத்தில் அடித்தார். ஜெயராமன் மண்வெட்டி பிடியால் இடது கையில் அடித்துவிட்டான். பாப்பத்தி என் அப்பா, அம்மா மீது மிளகாய் பொடியை துவிவிட்டார்கள். நாகராஜ் மண் வெட்டியால் எனது தம்பியை அவரது உடம்பில் அடித்துவிட்டார். என்னை ஜெயராமன், சின்னமணி கட்டையால் தாக்கினார்கள். நாங்கள் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். என் அம்மா புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

Avoe

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இளங்கலை அறிவியல் பட்டப்படிப்பு படித்திருக்கிறேன். நான் மருத்துவமனையில் புற நோயாளியாக சிகிச்சை பெற்று விட்டு வந்து விட்டேன். சம்பவம் நடந்த உடன் நேரடியாக காவல் நிலையம் செல்லாமல் மணப்பாறை மருத்துவமனைக்கு தான் சென்றோம் என்றால் நாங்கள் ஏற்கனவே காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து போலீசார் அங்கு வந்து இருந்தார்கள். நில அளவை நடைபெற்ற போது ஒரு போலீசார் இருந்தார். நில அளவை அன்று மூன்று மணிக்கு முடிவுற்றது. நில அளவை செய்தபோது பழைய கோட்டை ஆவணங்கள் கைவசம் இல்லாததால் முடிவாக நில அளவை செய்ய இயலவில்லை என்று நில அளவையர் தெரிவித்தார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளில் நில அளவையர் இரு தரப்பினருக்கும் சொந்தமான இடத்தை சரியான முறையில் முழுமையாக அளந்து அத்து காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நில அளவையர் அத்து காண்பிப்பதற்கு முன்பாகவே நாங்கள் கல் ஊன்றுவதற்கு சென்றதை எதிரிகள் தடுத்ததால் எதிரிகளை நாங்கள் தான் தாக்கி காயப்படுத்தினோம் என்றால் சரி அல்ல. நாங்கள் எதிரிகளை அடித்து காயப்படுத்தி விட்டு எங்களுக்கு எந்தவித காயங்களும் இல்லாத நிலையில் பொய் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல . நாங்கள் பொய் புகார் கொடுத்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எங்கள் இரு தரப்பையும் தவிர சர்வேயர் பத்தியநாதன், மற்றும் பொன்னுச்சாமி ஆகியோர்கள் இருந்தார்கள். எங்கள் வீட்டின் அருகில் ஐந்து ஆறு வீடுகள் இருக்கிறது .பத்தியநாதன், மற்றும் பொன்னுச்சாமி ஆகியோர்கள்இந்த வழக்கில் சாட்சிகளாக இருக்கிறார்கள். எதிரிகள் கொடுத்த புகாரின் அடிப்படையிலான வழக்கில் நாங்கள் இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் எதிரிகளாக இருந்து ஒரு வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 29/2024**
**P.W.5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பழனியப்பன் |
| Father's Name | : | திரு.துரைசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 70 |

(Accused 1 to 3 are present. Accused 4 absent. Petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் சடையநாயக்கனூரில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வி, அ.சா.2 பாஸ்கர், அ.சா.3 சுப்பிரமணி, அ.சா.4 சந்திரசேகர் ஆகியோர்களை தெரியும். அவர்கள் இந்து பள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்கள். நான் இந்து கவுர நாயுடு வகுப்பை சேர்ந்வர். சம்பவம் தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157–ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>**குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)**</u>

போலீசார் விசாரணையில் கடந்த 30.11.2022 அன்று பகல் மணி 3.00 மணி அளவில் நில அளவையர் அளந்து விட்டு சென்ற போது அ.சா.1 செல்வி மற்றும் அவரது குடும்பத்தினர் அவர்கள் இடத்தில் கல் ஊன்ற குழி

**தோண்ட ஆரம்பித்த போது எதிரிகள் அவர்களை சாதி பெயரை சொல்லி திட்டி அடித்து காயப்படுத்தினார்கள் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லி எதிரிகள் என்னுடைய சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதராவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Adobe Copy